In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 49/2021 | Prosecution witness P.W.10 |
| Name: C.Micheal Devid | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28-01-2025.

**(Accused absent, petition u/s 355 BNSS filed and allowed,)**

முதல் விசாரணை :-

நான் காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று திண்டுக்கல்லில் குடியிருந்து வருகிறேன். நான் அம்மயநாயக்கனூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக 2020ம் ஆண்டு பணிபுரிந்தபோது 17.05.2020ம் தேதி அதிகாலை 3 மணியளவில் நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த செண்பகராஜன் என்பவரிடம் அதிகாலை 4 மணிக்கு அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பதிவு செயது பின்னர் நிலையத்திற்கு 6 மணிக்கு வந்து நிலைய கு.எண்.319/2020 u/s 294(b), 324.IPC ஆக வழக்கை பதிவு செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் அன்றைய தினம் செண்பகராஜன் கொடுத்ததுதான். அந்த புகார் வாக்குமூலம் அதசாஆ .7. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதாஆ.8. முதல் தகவல் அறிக்கையை புகார் வாக்குமூலத்துடன் இணைத்து நிலக்கோட்டை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–

முதல் தகவல் அறிக்கையில் காலம் 3ல் அதிகாலை 4 மணிக்கு அரசு மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைத்த விவரத்தை குறிப்பிடவில்லை. 6 மணிக்கு வழக்கு பதிவு செய்ததை குறிப்பிட்டுள்ளேன். அரசு மருத்துவமனையிலிருந்து அதிகாலை 3 மணிக்கு காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அந்த விவரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் சொல்லி உள்ளேன். காவல் நிலையத்திலிருந்து நிலக்கோட்டை நீதிமன்றம் சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது. இருசக்கர வாகனத்தில் சென்றால் சுமார் அரைமணி நேரத்தில் சென்றுவிடலாம். முதல் தகவல் அறிக்கையை 11 மணி, 15 நிமிடம் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து காயம்பட்ட நபர் எந்த வாகனத்தில் சென்றார் என்று அவரது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளாரா என்றால் ஆம்புலன்சில் சென்றதாக சொல்லி உள்ளார். குறிப்பிட்டு எந்த ஆம்புலன்ஸ் என சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் சம்பவ இடத்தில் கோபி மற்றும் சிலர் ஆம்புலன்சில் அங்கிருந்து ஏற்றிவிட்டதாக சொல்லி உள்ளார் என்றால் சரிதான். நான் புகார் வாக்குமூலம் பெற்றபோது புகார் வாக்குமூலத்தில் செண்பகராஜன் ராஜா என கையெழுத்து செய்துள்ளார். அந்த புகார் வாக்குமூலம் பெற்றபோது செண்பகராஜனின் அண்ணன் கோபியிடம் சாட்சி கையெழுத்து எதுவும் வாங்கவில்லை. அந்த புகார் வாக்குமூலம் பெற்றபோது செண்பகராஜன் பேசும் நிலையில் இருந்தார். அப்போது மருத்துவர்கள், செவிலியர்கள் இருந்தார்கள். நான் சொல்வதுபோல் சொன்ன நேரம், விதத்தில் எந்த தகவலும் கிடைக்கப்பெறவில்லை என்றும் பின்னிட்டு வழக்கிற்காக காயம்பட்டவரிடம் வாக்குமூலம் எழுதி அவரிடம் கையொப்பம் பெற்று காலதாமதமாக நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பப்பட்டும், காயம்பட்டவருக்கு

ஆதரவாக புகார் வாக்குமூலம் சம்மந்தமாக சரிவர விசாரிக்காமல் எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை –இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.01.28 16:52:37 +0530

Principal District Judge,
Dindigul.